[30th March 1964

தடுக்க சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் விவர மென்ன ?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

இதுபற்றிய அறிக்கை[a] ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறபடி, விவசாய இலாகா டாக்டர் அவர்கள் த்ராங்கத்ரா கெமிகல்ஸ் கம்பெனிக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் இந்த உப்புத் தண்ணீரால் பாதிக்கப்பட்ட நிலங்களை அப்புறப்படுத்துவதற்கு, எவ்வளவு காலம் ஆகும், எத்தனை ஏக்கர்களுக்கு நஷ்டஈடு கோரப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இப்போது இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், நுணுக்க அதிகாரிகள் பரிசீலனை செய்ததில், இப்போதுள்ள உப்புத் தண்ணீரின் காரணமாக சுமார் 3,000 ஏக்கர் வரை பாதகம் அடையும் என்று சொல்லியிருக்கின்ற தகவல் உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, இதைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. கலக்டர் அவர்கள் ஒரு ரிப்போர்ட்டை போர்ட் ஆஃப் ரெவினயூக்கு அனுப்பியிருக்கிறார். அதை அவர்கள் பரிசீலனை செய்த பின்னால் அரசாங்கத்திற்கு அனுப்புவார்கள்.

Stipend to teacher trainees

* 458 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to enhance the stipend amount paid to the students of the Teachers Training Schools; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : இந்த ஸ்டைஃபண்ட் நிர்ணயிக்கும்போது இருந்த நிலை, இப்போதுள்ள நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை அரசாங்கம் அறியும். ஆகவே தற்போதுள்ள நிலையை உத்தேசித்து இந்த ஸ்டைஃபன்டை உயர்த்துவதற்கு அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா ?

---

a Printed as Appendix IV on pages 735–736.

30th March 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆரம்ப பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு 12 ரூபாய் ஸ்டைஃபன்ட் என்றும், செக்கன்டரி பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு 18 ரூபாய் ஸ்டைஃபன்ட் என்றும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஆரம்ப பள்ளிப் பயிற்சியை எடுத்துவிடுவதாக அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. மேலும் இப்போது கொடுக்கப்படும் ஸ்டைஃபன்டை உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை. செகண்டரி பயிற்சி பெறுகின்றவர்களுக்கு 18 ரூபாய் முன்பு போல் கொடுக்கப் படுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிக்கு வருகிறவர்களுக்கு மாதம் 18 ரூபாய் கொடுப்பது எந்த அளவுக்குப் போதும் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓரளவுக்குப் போதும் என்றுதான் கொடுக்கிறோம். அவர்களுடைய செலவுகளுக்கெல்லாம், வாழ்க்கைச் செலவுகளுக்கெல்லாம் கொடுப்பது என்று அல்ல.

திரு. ம. கமலநாதன் : ஆரம்ப ஆசிரியர் பயிற்சி பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு பயிற்சியை நிறுத்துவதாக இருந்தாலும் இருக்கும் காலத்துக்கு ஸ்டைஃபண்ட் கொடுக்கிறோம் என்று சென்ற ஆண்டு உத்திரவு வந்தது. இந்த ஆண்டும் அந்த மாதிரி உத்திரவு போடப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது மாணவர்களாக இருக்கிறவர்களுக்கு, அதாவது முன்னமேயே சேர்ந்து பயிற்சி பெறுகின்றவர்களுக்கு ஸ்டைஃபன்ட் கொடுக்கப்படும்.

Pre-Primary schools

* 459 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to open Pre-Primary schools in all the Panchayat Unions in the Kanyakumari district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ப்ரீ-ப்ரைமரி ஸ்கூல்களுக்கு முனிஸிபல் எல்லையில் உள்ளவற்றுக்காவது அனுமதி கொடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு உத்தேசம் இல்லை. ஆரம்பப் பள்ளிகள் எவ்வளவு வேண்டுமோ வைத்து அவைகளுடைய செலவை ஏற்க வேண்டும் என்பதுதான் கொள்கை. இதற்கு மேல் ப்ரீ-ப்ரைமரி ஸ்கூல்களுக்கான செலவையும் ஏற்க வேண்டுமென்றால் அதற்கு நிதி நிலை அனுமதிக்காது.

திரு. எம். தண்டாயுதபாணி : பாலர் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 20 ரூபாய் மாதச் சம்பளம் கொடுக்கப் படுகிறது. இதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசினருக்கு உண்டா ?